யிருப்புகளினுடைய ஆரம்பப் பணிகள் எப்பொழுது துவங்கப் படும், அதனுடைய திட்ட மதிப்பீடு எவ்வளவு என்று அறிய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் இரண்டாவது தொகுதியைப் பொறுத்த வரை, அழகாபுரத்தில் 4.3 ஏக்கர் நிலப் பரப்பிலே 108 அடுக்கு மாடி வீடுகள் கட்டும் திட்டமும், ஐயம்பெருமாள்பட்டியிலே 3.40 ஏக்கர் நிலப்பரப்பில் 72 வீடுகள் கட்டும் திட்டமும் செயல்படுத்தப்படும். மேலும், வீட்டு வசதி வாரிய ஊழியர்களுக்காக 30 அடுக்கு மாடி வீடுகள் ரூபாய் 6 இலட்சத்தில் கட்டும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது. 120 தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகள் ரூபாய் 154 இலட்சத்தில் கட்டும் திட்டத்திற்கு அரசு ஆணை 1357, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, 16—10—1991 தேதியிட்ட முன்னுரிமைப் பட்டியலில் ஒப்புதல் அளித்து இருக்கின்றது. அதே போல, கந்தம்பட்டியிலே ரூபாய் 60 இலட்சத்தில் மேம்படுத்தப்பட்ட மனைப் பிரிவுகளாக 78 காலி மனைகளும், நடுத்தர குடியிருப்புக்காக 38 வீடுகள் கட்டும் திட்டமும் அரசின் பரிசீலனையில் உள்ளது. நான்காவதாக அன்னதானப்பட்டியிலே உயர் வருவாய்ப் பிரிவினருக்கு 12 வீடுகளும், மத்திய வருவாய்ப் பிரிவினருக்கு 31 வீடுகளும், குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு 208 வீடுகளும் சுமார் 2 கோடியே 33 இலட்சம் செலவில் கட்டும் திட்டமும் அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. கூடிய விரைவில் இவைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 256, திரு. அ. தேவராஜ். மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

256—

இலவச காலணித் திட்டம் எடுத்துவிட்டதால் வேலை வாய்ப்பு இல்லாதவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு.

*4697 திரு. அ. தேவராஜ் :
மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செய்யாறு நகரில் இலவச காலணித் திட்டத்தை எடுத்து விட்டதால் வேலைவாய்ப்பு இல்லாமல் போனவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு அளிக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு ஆவன செய்கிறது.

(ஆ) தற்போதைய சூழ்நிலையில் செய்யாறில் உற்பத்திக் கூடம் மீண்டும் திறக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. அ. தேவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை எடுத்து விட்டதால் பாதிக்கப்பட்டு நிறைய பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். உடனடியாக அவர்களுக்கு வேலை கிடைக்க ஆவன செய்ய முடியுமா? எப்பொழுது செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மையத்தில் 69 பேர் வேலை செய்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பதவியேற்ற பின் இது வரை இதில் 32 பேர்களுக்கு காஞ்சீபுரம் டால்கோ கூடத்தில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. மீதி உள்ளவர்களுக்கும் விரைவில் அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 257 திரு. தா. வேடியப்பன். மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

257—

சத்துணவு மையங்கள் புதிதாக ஏற்படுத்தல்.

*6185—திரு. தா. வேடியப்பன் :

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போளூர்—காங்ஙூர் ஊராட்சியில் உள்ள சோழங்குப்பம் கிராமம், திண்டிவனம் ஊராட்சியில் கணேசபுரம் பகுதிகளில் சத்துணவு மையங்கள் புதிதாக ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பரிசீலிக்கப்படும் ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தற்சமயம் இல்லை.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவருடைய புகழைப் பரப்பி, நிலை நிறுத்திக் கொண்டிருக்